**REA.121/2017 in EP.No.80/2008**

நாள்.02.02.2018

ம.சா.3 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் பெறப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

மனு சொத்து நிறைவேற்று மனு மனுதாரருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்றால் தவறு. பூர்வீக சொத்து பாகப்பிரிவினை ஏற்பட்டதா என்றால் சகோதரர்களுக்கு இடையில் பாகம் ஏற்பட்டதாக சொன்னார்கள். பாகப்பிரிவினை ஏற்பட்ட ஆவணங்கள் பார்த்தீர்களா, மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா தீர்ப்பாணை ரத்து செய்யப்படவில்லை நிலுவையில் உள்ளது என்றால் தெரியவில்லை. மனு சொத்து என் தாயார் கிரயம் பெற்றது செல்லாது என்றால் சரியல்ல. என்னுடைய தாயார் பெயரில் உள்ள கிரய ஆவணம் தாவா வாதியை கட்டுப்படுத்தாது என்றால் தவறு. தாவாவில் என்னுடைய தாயாருக்கு சட்டப்படி சம்மன் சார்வு செய்யப்பட்டது என்றால் தவறு, அவ்வாறு சார்வு செய்யப்படவில்லை. தாவா தீர்ப்பாணையின்படி நிறைவேற்று மனு மனுதாரரின் சுவாதீனத்தை நாங்கள் கட்டுப்படுத்த முடியாது என்றால் சரியல்ல. மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

WEB COPY